

தாம்பரம், டாக்டர் அம்பேத்கர் திருமண மண்டபத்தில் மாநகராட்சி தூய்மை பணியாளர்கள் மேம்பாட்டு திட்டம், தூய்மை பணியாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கான அரசு சேவைகள் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் முகாமினை மேயர் வசந்தகுமாரி கமலக்கண்ணன் தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் தாம்பரம் மாநகராட்சி ஆணையர் ரா.சரண்யா, மாநகராட்சி துணை மேயர் கோ.காமராஜ், மண்டலக் குழுத் தலைவர்கள் டி.காமராஜ், இ.ஜோசப் அண்ணாதுரை, சு.இந்திரன் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள், தூய்மை பணியாளர்கள், அவர்களது குடும்பத்தினர் மற்றும் பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

மாவட்டச் செயலாளர் மா. சுப்பிரமணியன் தலைமையில் – தென்சென்னை மாவட்ட முன்னாள் அவைத் தலைவர்

சு.ஜம்புலிங்கம் 22ஆம் ஆண்டு நினைவுநாள் ஊர்வலம்!

கழகத்தினருக்கு – கலைஞர் நகர் தெற்குப் பகுதிச் செயலாளர் கே.கண்ணன் வேண்டுகோள்!

சென்னை, அக்.16- தென்சென்னை மாவட்ட முன்னாள் அவைத்தலைவர் சு. ஜம்புலிங்கம் அவர்களின் 22ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்ச்சி நாளை (17.10.2026) நடைபெறுகிறது. இதில் கழகத்தினர் பங்கேற்றிடுமாறு கலைஞர் நகர் தெற்குப் பகுதி கழகச் செயலாளர்

கே. கண்ணன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:-

கலைஞர் நகர் பகுதியில் கழகம் வளர்த்தவரும், தென் சென்னை மாவட்ட முன்னாள் அவைத்தலைவரும். இருமுறை மாவட்ட துணைச் செயலாளராகவும், கலைஞர் நகர் பகுதி உருவான பொழுது முதல் பகுதி கழக பொறுப்பாளராகவும், பகுதிச் செயலாளராகவும், சென்னை மாநகராட்சி 131 வார்டு மாமன்ற உறுப்பினராக இருமுறையும், தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதியில் வாழும் மக்களுக்கு சிறப்பாகப் பணியாற்றியவரும் அனைத்துத் தரப்பு மக்களின் நன்மதிப்பைப் பெற்றவருமான

(நினைவில் வாழும்) சு.ஜம்புலிங்கம் அவர்களின் 22ம் ஆண்டு நினைவு நாள் நிகழ்ச்சி நாளை (17.10.2026-சனிக்கிழமை) காலை சரியாக 8.00 மணிக்கு நடைபெறுகிறது. இதில் சு.ஜம்புலிங்கம் அவர்களின் இல்லத்தில் அலங்கரிக்கப்பட்ட அவரது திருவுருவப் படத்திற்கு சென்னை தெற்கு மாவட்ட செயலாளர் மேனாள் அமைச்சர் மா.சுப்பிரமணியன் மலர் தூவி மரியாதை செலுத்துகிறார்.

அதை தொடர்ந்து தலைமைச் செயற்குழு உறுப்பினர் க. தனசேகரன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகர் ராஜா, கழக வர்த்தக அணி செயலாளர் கவிஞர் காசி முத்து மாணிக்கம், கலைஞர் நகர் வடக்கு பகுதிச் செயலாளர் மு.ராசா, பொதுக் குழு உறுப்பினர்கள் உ. துரைராஜ், எஸ்.டி. தங்கராஜ், பி.எஸ். முருகேசன் மாவட்ட துணைச் செயலாளர் பா.வாசுகி பாண்டியன் ஆகியோர் இந்நிகழ்ச்சியில் பங்கேற்று அன்னாரின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்துகின்றனர்.

அதை தொடர்ந்து அவரது இல்லத்திலிருந்து சென்னை தெற்கு மாவட்டச் செயலாளர் மா.சுப்பிரமணியன் தலைமையில் நினைவு நாள் ஊர்வலமாகப் புறப்பட்டு ஜாபர்கான் பேட்டை சத்தியா நகரில் அமைந்துள்ள இடுகாட்டில் அவரது நினைவிடத்தில் கழக தோழர்களோடு சென்று அஞ்சலி செலுத்த உள்ளனர்.

மதியம் 11.00 மணியளவில் அன்னதானமும் திரு மதி.அலமேலுஜம்புலிங்கம் அவர்களால் துவக்கி வைக்கப்படுகிறது. இந்நிகழ்வில் தலைமை நிலைய நிர்வாகிகள், மாவட்ட, பகுதி நிர்வாகிகள், வட்ட செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், வட்ட கழக நிர்வாகிகள், மாவட்ட பகுதி அணிகளின் நிர்வாகிகள், கழகத்தின் முன்னோடிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கலைஞர் நகர் தெற்கு பகுதிச் செயலாளர் கே.கண்ணன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சட்டம் – ஒழுங்கு சீர்குலைவு! மதுரை, கம்பம், ஸ்ரீவில்லிபுத்தூரில்

ஒரே நாளில் 3 பேர் வெட்டிக்கொலை!

3 பேர் படுகாயம்!

மதுரை, அக். 16 - மதுரை, கம்பம், ஸ்ரீவில்லிபுத்தூரில் ஒரே நாளில் 3 பேர் கொலை செய்யப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. மதுரை மாவட்டம், விராதனூர் சத்யா நகர் பகுதியை சேர்ந்தவர்கள் சந்தோஷ்குமார் (24), தினேஷ் (20). இருவரும் நேற்று முன்தினம் நள்ளிரவில் அப்பகுதியில் டூவீலரில் சென்று கொண்டிருந்தனர். அப்போது அவ்வழியாக வந்த கார் திடீரென டூவீலர் மீது மோதியது. இதில் இருவரும் நிலைதடுமாறி கீழே விழுந்தனர். காரில் இருந்து இறங்கிய கும்பல், இருவரையும் சரமாரியாக வெட்டிவிட்டு தப்பிச் சென்றது. இச்சம்பவத்தில் பலத்த காயமடைந்த சந்தோஷ்குமார் சம்பவ இடத்திலேயே துடிதுடித்து உயிரிழந்தார். தினேஷ் படுகாய மடைந்தார்.

கம்பம்: தேனி மாவட்டம், கம்பம் அருகே உள்ள அண்ணாபுரம் பகுதியை சேர்ந்தவர் பிரபு (32). இங்குள்ள ஜவுளிக்கடையில் வேலை பார்த்து வந்தார். இவரது மனைவியும் அதே கடையில் வேலை பார்த்து வருகிறார். இருவரும் நேற்று முன்தினம் தினம் இரவு கம்பம் புறவழிச் சாலை பகுதியில் உள்ள திரையரங்கிற்கு டூவீலரில் சென்றனர். கம்பம் ஊத்துக்காடு பிரிவு அருகே, இவர்களின் டூவீலர் மீது எதிரே வந்த மற்றொரு டூவீலர் லேசாக உரசியது. அந்த டூவீலரில் கம்பம் கோம்பை ரோடு பகுதியை சார்ந்த ரஞ்சித் (21), கிரி (21), வருச நாடு பகுதியை சேர்ந்த முத்துப்பாண்டி (23) ஆகியோர் இருந்தனர். அவர்களிடம், 'ஒரே வாகனத்தில் மூன்று பேர் ஏன் இவ்வளவு வேகமாக வருகிறீர்கள்?' என்று கேட்டு பிரபு கண்டித்தார்.

பின்னர் மனைவியை திரையரங்கில் இறக்கி விட்ட அவர், டூவீலரை நிறுத்த பார்க்கிங் பகுதிக்கு சென்றார். அங்கு வந்த ரஞ்சித், கிரி, முத்துப்பாண்டி ஆகியோர் அவருடன் தகராறு செய்தனர். தகராறு முற்றிய நிலையில் திடீரென கத்தியை எடுத்து பிரபுவை சரமாரியாக தாக்கியதில் அவர் உயிரிழந்தார். கம்பம் வடக்கு போலீசார் வழக்குப்பதிந்து ரஞ்சித், கிரி ஆகியோரை கைது செய்தனர். ஸ்ரீவில்லிபுத்தூர்: விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் அருகே உள்ள கூனம்பட்டியைச் சேர்ந்தவர் ஈஸ்வரன் (48). கூலி தொழிலாளி. இவரது மனைவி பாலகுரு (42). ஸ்ரீவில்லிபுத்தூர் அருகே உள்ள சித்தா லம்புத்தூர் பகுதியை சேர்ந்தவர் தமிழழகன் (34). டிரைவர். இவருக்கு திருமண மாகி மனைவி இறந்துவிட்டார்.

இவர் ஈஸ்வரனின் மகளுடன் பழகி வந்துள்ளார். இதனை ஈஸ்வரன் கண்டித்துள்ளார். இந்நிலையில் ஈஸ்வரனின் மகளை பெண் கேட்டு தமிழழகன் சமீபத்தில் வீட்டிற்கு வந்தார். அப்போது அவர்களுக்குள் தகராறு ஏற்பட்டது. இதனிடையே நேற்று முன்தினம் இரவு ஈஸ்வரனின் வீட்டிற்கு தமிழழகன் வந்தார். அப்போது ஈஸ்வரன் கண்டித்ததால் திரும்ப சென்றுவிட்டார். இதையடுத்து ஈஸ்வரனும், அவரது மனைவி பாலகுருவும் சித்தாலம்புத்தூரில் உள்ள தமிழழகனின் வீட்டிற்கு சென்றனர். அங்கு, நடந்த சம்பவங்களை அவரது தந்தையிடம் கூறி கண்டித்தனர்.

அப்போது ஈஸ்வரனுக்கும் தமிழழகனுக்கும் தகராறு ஏற்பட்டது. ஆத்திரமடைந்த ஈஸ்வரன், தான் கொண்டுவந்த அரிவாளால் தமிழழகனை வெட்டினார். அப்போது தமிழழகன் அந்த அரிவாளை பிடுங்கி பதிலுக்கு ஈஸ்வரனை சரமாரியாக வெட்டினார். இதில் ஈஸ்வரன் உயிரிழந்தார். தடுக்க முயன்ற ஈஸ்வரன் மனைவி பாலகுருவுக்கும் வெட்டு விழுந்தது. இது குறித்து போலீசார் விசாரிக்கின்றனர்.

பாலியல் தொழில் போட்டி? வாலிபர் கொன்று புதைப்பு

காட்பாடி தாலுகா திருவலம் அடுத்த அம்முண்டியை சேர்ந்தவர் தேவராஜ் (35). இவர் வேலூர் காகிதப்பட்டறையில் உள்ள ஒரு தனியார் லாட்ஜில் ஊழியராக பணிபுரிந்து வந்தார். கடந்த 9ம் தேதி காலை வழக்கம் போல் வீட்டில் இருந்து பணிக்கு சென்றவர், வீடு திரும்பவில்லை. தேவராஜ் கடைசியாக சென்ற யாசினை (32) உட்பட 2 பேரை பிடித்து விசாரித்தில், தேவராஜை கழுத்தில் வெட்டி கொலை செய்து யாசின் வீட்டின் பின்புறம் புதைத்திருப்பது தெரியவந்தது.

முதற்கட்ட விசாரணையில், யாசின் சூதாட்ட கிளப் நடத்தி வந்ததும், பெண்களை வைத்து விபசாரம் செய்து வந்ததும் தெரியவந்தது. தேவராஜ் பணி செய்து வந்த தனியார் லாட்ஜிலும் விபசாரம் உட்பட சமூக விரோத செயல்கள் நடந்து வருவதும் தெரியவந்தது. இதனால் தொழில் போட்டியில் தேவராஜ் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என கூறப்படுகிறது.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

வழக்கறிஞர் நா. குப்புசாமி
அக்டோபர் 16 (1994)



இளமைக்காலம் முதல் இயக்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர். கழகத்தில் பொதுக்குழு உறுப்பினர், மாவட்ட துணைச் செயலாளர், மாவட்டப் பொறுப்பாளர் என பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

1974ல் தலைவர் கலைஞர் அவர்கள் தலைமையில் தஞ்சையில் நடைபெற்ற தீண்டாமை ஒழிப்பு மாநாட்டில் முன்னிலை வகித்தார். அதோடு தனது பகுதியில் தீண்டாமை ஒழிப்பு பிரச்சாரத்தை செய்தவர்.

தாழ்த்தப்பட்ட வகுப்பில் பிறந்த இவர் சிறந்த வழக்கறிஞராகவும் பணியாற்றியவர்.

கழகத் தோழர்களின்மீது தொடுக்கப்பட்ட பல வழக்குகளில் ஆஜராகி அவர்களுக்காக வாதாடியவர்.

கழகம் அறிவித்த விலைவாசி உயர்வுப் போராட்டம் உள்ளிட்ட அனைத்துப் போராட்டங்களில் பங்கேற்றுள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

செஞ்சி அருகே 4 நாட்களாக மாயமான

7 வயது சிறுமியின் பெற்றோருக்கு - முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் நேரில் ஆறுதல்!

செஞ்சி, அக். 16 - விழுப்புரம் மாவட்டம் செஞ்சியை அடுத்த ஆலம் பூண்டி ஊராட்சி நடுப்பட்டு கிராமத்தைச் சேர்ந்த 7 வயது சிறுமி ஹேமாவதி கடந்த 12ஆம் தேதி வீட்டில் தூங்கிக் கொண்டிருந்த போது மாயமானார். சிறுமி மாயமாகி 4 நாட்கள் ஆகியும் இதுவரை எந்த துப்பும் கிடைக்காததால் போலீசார் தீவிர விசாரணை நடத்தி சிறுமியை தேடி வருகின்றனர்.

இந்நிலையில் சிறுமியின் வீட்டிற்கு நேரில் சென்ற விழுப்புரம் வடக்கு மாவட்டச் செயலாளர், முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான், சிறுமியின் பெற்றோரை சந்தித்து ஆறுதல் தெரிவித்தார்.

தொடர்ந்து சம்பவ இடத்தில் இருந்த செஞ்சி டி.எஸ்.பி. ரமேஷ் ராஜிடம் இச்சம்பவம் குறித்து கேட்டறிந்த அவர், காவல்துறையினர் பல்வேறு கோணங்களில் விசாரணையை துரிதப்படுத்தி மாயமான சிறுமியை உயிருடன் மீட்டு பெற்றோரிடம் ஒப்படைக்க வேண்டும் என அவர் கேட்டுக்கொண்டார்.

சந்தி சிரிக்கும் சட்டம் – ஒழுங்கு!

செயலற்ற விஜய் ஆட்சியில் கொலை, கொள்ளைகள்!

(14.10.2026)



1. மதுரை அருகே விரகனூரில் பைக்கில் சென்ற இருவரை விரட்டிச் சென்று சரமாரியாக வெட்டிய கும்பல்...

2. கடலூர் மாவட்டம் பண்ருட்டி அருகே குடிபோதையில் ஆட்டோ ஓட்டுநர்களுக்குள் தகராறு, கத்தியால் குத்தியதில் ஒருவர் படுகாயம் ..

3. குமரி மாவட்டம் மார்த்தாண்டம் அருகே ஓடும் ரயிலில் இளம் பெண்ணுக்கு பாலியல் தொந்தரவு கொடுத்த வாலிபர் சிக்கினார் ...



4. திருநெல்வேலி பேருந்து நிலையம் அருகே வேலைக்குச் சென்ற பெண்ணிடம் பாலியல் அத்துமீறலில் ஈடுபட்ட ரவுடி ....

5. சென்னை சாஸ்திரி நகரில் இளம்பெண்ணுக்கு டார்ச்சர் கொடுத்த வாலிபரை கண்டித்த பெண்ணின் தந்தைக்கு கத்திக் குத்து ...

6. சிவகாசியில் சாலையில் நடந்து சென்ற இளம் பெண்ணிடம் பாலியல் அத்துமீறலில் ஈடுபட்ட வாலிபர் சிக்கினார்....

7. திருத்தணி அருகே ஆர்.கே. பேட்டையில் 80 வயது மூதாட்டிக்கு பாலியல் தொல்லை அளித்த 7 ஆம் வகுப்பு படிக்கும் சிறுவன் சிக்கினான்...

8. விழுப்புரம் மாவட்டம், செஞ்சி அருகே வீட்டில் தூங்கிக் கொண்டிருந்த 7 வயது சிறுமி மாயம் ....

9. சென்னை தேனாம்பேட்டையில் கல்லூரி மாணவியை விரட்டிச் சென்று டார்ச்சர் கொடுத்த வாலிபர் சிக்கினார் ...

10. திருவாரூர் அருகே செவிலியர் குளித்ததை செல்போனில் வீடியோ எடுத்தவர் சிக்கினார்" செல்போனில் மேலும் சில பெண்களின் வீடியோக்கள் இருப்பதாக கூறப்படும் நிலையில் காவல்துறை தீவிர விசாரணை....



11. சிதம்பரம் அருகே அண்ணாமலை நகர் காவல் நிலைய சரகத்திற்கு உட்பட்ட P.N. நகரில் ரேஷன் கடை ஊழியர் வீட்டில் பட்டப்பகலில் பூட்டை உடைத்து வெள்ளிப் பொருட்கள் முக்கிய ஆவணங்கள் திருட்டு....

12. ஈரோடு மாவட்டம் பெருந்துறை அருகே சீனாபுரம் கிராமத்தில் நடந்து சென்ற மூதாட்டியிடம் மூன்று சவரன் செயினை பறித்துச் சென்ற பைக் ஆசாமிகள் ...

13. சென்னை அரும்பாக்கம் எம்.எம்.டி.ஏ. காலனியில் உள்ள ஏ.டி.எம். மில் நூதன மோசடி செய்து பணம் கொள்ளை ....


14. சென்னை வியாசர்பாடியில் பூ வியாபாரியின் வீட்டின் பூட்டை உடைத்து நகை மற்றும் பணம் கொள்ளை...



15. கோவையை அடுத்த பெரிய நாயக்கன் பாளையத்தில் திருமண தோஷ பரிகாரம் செய்வதற்கு வந்த பெண் இன்ஜினியரிடம் பலாத்காரம் செய்ய முயற்சித்த ஜோதிடர்...

16. விழுப்புரம் மாவட்டம் காணை அருகே ஆயாத்தூர் கிராமத்தில் பாளையத்தம்மன் கோவில் இரண்டு உண்டியல்கள் அடியோடு அறுத்து திருட்டு, கோவில் மணியையும் அறுத்து எடுத்துச் சென்றனர் ...

17. சென்னையை அடுத்த திருவேற்காடு அடுத்த கீழ் அயனம்பாக்கத்தில் நண்பரை தாக்கியதால் ஆத்திரம், வாலிபர் வீட்டின் மீது பெட்ரோல் குண்டுகள் வீச்சு ....



18. சென்னை முகப்பேர் அருகே கொலை வழக்கில் சாட்சி சொல்லக் கூடாது என தே.மு.தி.க. பிரமுகருக்கு கொலை மிரட்டல் , பயந்து போய் காவல் நிலையத்தில் தஞ்சம் புகுந்ததால் பரபரப்பு ...

19. சென்னை வடபழனி கங்கை அம்மன் கோவில் தெருவில் கஞ்சா போதையில் இருந்த வாலிபர் மசூதியில் புகுந்து கண்ணாடி, சேர் டேபிள் ஆகியவற்றை உடைத்து ரகளை, விசாரிக்க வந்த காவல்துறையினரை தாக்க முயற்சி....

20. சென்னை வண்ணாரப்பேட்டை எம்.சி. ரோட்டில் நடைபாதை கடைகளை அகற்றக்கோரி நிரந்தர கடை உரிமையாளர்கள் 500க்கும் மேற்பட்டோர் ஆர்ப்பாட்டம், மறியல், போலீசார் உடன் வாக்குவாதம் தள்ளுமுள்ளு....

21. தர்மபுரி மாவட்ட கலெக்டர் அலுவலக வளாகத்தில் நடைபெற்ற நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியின் போது அமைச்சர் ராஜ்குமார் பேசிய போது மின்சாரம் துண்டிப்பு ...



22. சென்னை திருவொற்றியூர் பத்திரப்பதிவு அலுவலகம் அருகே அரசு போலி முத்திரைத்தாள்கள் தயாரித்து பல கோடி ரூபாய் சுருட்டிய கும்பல் ....